**Minutes of Public Hearing conducted on 18/11/2025 at 11:00 A.M. in AR MAHAL, Sankarankoil Main Road, Kanarpatti, Tirunelveli with respect to the Proposed Rough stone and Gravel Quarry by the Project Proponent Thiru.B.Paramasivam over an extent of 2.39.0 Ha in S.F. Nos. 103/1A, 103/1B, 103/2A, 103/2B, 102/2, 102/3, 99/2, and 99/3 of Kanarpatti Village, Manur Taluk, Tirunelveli District.**

**Details of participants in this meeting.**

1. Tmt.M.Priya., M.E - Revenue Divisional Officer, Tirunelveli
2. Er.D.M.Krishnababu.,M.E - District Environmental Engineer, TNPC Board, Tirunelveli.
3. Er.J.Jeya Priya.,M.E - Assistant Engineer, O/o.District Environmental Engineer, TNPC Board, Tirunelveli.

Public and Government Officials – 190 Nos Copy of Attendance (Annexure-1)

The public hearing under EIA Notifications, 2006 for proposed Rough stone and Gravel Quarry by the Project Proponent Thiru.B.Paramasivam over an extent of 2.39.0 Ha in S.F. Nos. 103/1A, 103/1B, 103/2A, 103/2B, 102/2, 102/3, 99/2, and 99/3 of Kanarpatti Village, Manur Taluk, Tirunelveli District was conducted on 18/11/2025 at 11.00 A.M in AR MAHAL, Sankarankoil Main Road, Kanarpatti, Tirunelveli.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli welcomed the Revenue Divisional Officer, Tirunelveli, public, Government officials and industry representatives who have attended the public hearing. He informed that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notifications, 2006. In this regard, public notices were already published in "Dinamalar" & "The New Indian Express" on 10/10/2025 and also announcement made to the public through vehicle announcement and distributing pamphlets.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA), Tamil Nadu for taking necessary action.

Also, he asked the project proponent to explain about the project to the public, and said that the public can express their opinions after the explanation.

Then the Environmental consultant of Project Proponent explained about the project of proposed Rough stone and Gravel Quarry by the Project Proponent Thiru.B.Paramasivam to the public through a Power Point Presentation.

Then, the District Environmental Engineer has requested the public to express their views one by one on the project orally or in writing and also informed that the public views are recorded and will be sent to the SEIAA, Tamil Nadu for taking necessary action.

Subsequently, the public has started expressing their views with respect to the project as follows.

**Mrs. Nancy Samadhanam, Kanarpatti :-**

Mrs. Nancy Samadhanam, said that quarries are in operation for 25 years in this area and she is carrying agricultural activities on the southern side of this quarry, the quarry owner is helping them with their needs and the establishment of this quarry will not affect their agriculture activity in any way and she requested to grant permission for this quarry.

**Mrs. Priscilla Arulselvan, Parvathiyapuram :-**

Mrs. Priscilla Arulselvan said that quarries are under operation for 25 years and there are no ill effects due to the operation of this quarry. She also said that the quarry owner is helping them and she requested to grant permission for this quarry.

**Mr. John, Kanarpatti :-**

Mr. John said that he runs his own business with tipper trucks, and presently construction materials were brought from Kayathar which causes high transportation costs, and if this quarry is being operated, the people of this town will get construction materials at low prices and there will not be any impact from quarrying and therefore requested to be grant permission for this quarry.

**Mr. Vijayaraj, Kanarpatti :-**

Mr. Vijayaraj said that he is doing construction contract business and this quarry has been operating for 25 years and has not caused any problems to them. At present, due to the shortage of Jelly, they are being brought from Kayathar and if this quarry is operated, rough stones will be available immediately.

**Mr. Prem Kumar, Ex-Army Soldier, Kanarpatti :-**

Mr. Prem Kumar said that this quarry has been beneficial to their village for so many years and that there is no problem for their villagers and the Panchayat. The Kanarpatti Panchayat receives about rupees 1.5 crores through the mineral funds and the drinking water facilities have been provided from this mineral fund to Kanarpatti and nearby hamlets through the 'Jal Jeevan Mission'. And if any of the villagers of Kanarpatti die, help will be provided by the quarry, also free stone and gravel will be provided to the villagers and therefore requested to grant permission for the quarry immediately.

**Mrs. Jebakani, Ramanathapuram :-**

Mrs. Jebakani said that she has been working as a volunteer in a NGO for many years. She said that this quarry will improve the livelihood of the common people, and provide educational facilities, drinking water facilities, road facilities, medical facilities, employment and essential goods and therefore she welcomed the quarry and requested to grant permission.

**Mr. Samuel Jebaraj, Kanarpatti:-**

Mr. Samuel Jebaraj said that the establishment of this quarry will be beneficial to everyone, the church and school located here will not get affected by this quarry and requested to grant permission for the establishment of this quarry.

As no other public came forward to record their views, the District Environmental Engineer said to submit written petition if any. After that, 173 numbers of written petitions were received in the public hearing meeting.

Finally, The District Environmental Engineer said that all the views informed will be recorded and will be submitted along with videography to State Environmental Impact Assessment Authority to take necessary action and thanked all the public attended the meeting.

The meeting came to an end.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tirunelveli**

**Revenue Divisional Officer,**
**Tirunelveli District**

**Annexure:**

1. Copy of Attendence ( Total - 23 Pages, 190 Participants)
2. Pendrive consisting of the Recorded Video of the entire public hearing.
3. Press release Notice (Tamil & English)
4. Written Petition received from the public for this proposed Project -173 Nos

**திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், கானார்பட்டி கிராமம், புல எண்கள். 103/1A, 103/1B, 103/2A, 103/2B, 102/2, 102/3, 99/2 மற்றும் 99/3 விஸ்தீரணம் 2.39.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு. B.பரமசிவம் அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 18/11/2025 அன்று முற்பகல் 11.00 மணியளவில் திருநெல்வேலி மாவட்டம், கானார்பட்டி கிராமம், சங்கரன்கோவில் மெயின் ரோட்டில் அமைந்துள்ள AR மஹாலில் வைத்து நடைபெற்ற பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி. M. பிரியா, எம்.கி., | - | வருவாய் கோட்டாட்சியர்<br>திருநெல்வேலி. |
| 2. | திருது.மு. கிருஷ்ணபாபு, எம்.இ., | - | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருநெல்வேலி. |
| 3. | திருமதி.ஜே.ஜெய பிரியா, எம்.இ., | - | உதவி பொறியாளர்,<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருநெல்வேலி. |

மற்றும் பொது மக்கள், தொழிற்சாலை பிரதிநிதிகள் 190 நபர்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.)

*********

திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், கானார்பட்டி கிராமம், புல எண்கள். 103/1A, 103/1B, 103/2A, 103/2B, 102/2, 102/3, 99/2 மற்றும் 99/3 விஸ்தீரணம் 2.39.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு. B.பரமசிவம் அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் 18/11/2025 அன்று முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், திருநெல்வேலி அவர்களையும், கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு பங்கேற்க வந்த பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் அனைவரையும் வரவேற்றார். மேலும் இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இந்த பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து 10/10/2025 அன்று "தினமலர்" மற்றும் "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்ததை சுட்டிக் காட்டினார். அதன்பின் மக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பாக பொது மக்களுக்கு கடந்த வாரம் துண்டு பிரசுரங்கள், வாகன பிரச்சாரம் மூலம் அறிவிப்பு செய்ததை கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்துக்கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவுசெய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு மேல் நடவடிக்கைகாக அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

தொழிற் திட்டம் தொடர்பான விளக்கங்களை, தொழிற் நிறுவனம் சார்பில் பொதுமக்களிடம் விளக்குமாறு கேட்டுக்கொண்டு, விளக்கத்திற்கு பின் பொது மக்கள் தங்கள் கருத்துகளை தெரிவிக்கலாம் என கூறினார்.

அதன்பின் திரு. B.பரமசிவம் அவர்களால் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர். இத்திட்டம் தொடர்பாக புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விவரித்தார்.

அதனை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொது மக்கள் இத்திட்டம் குறித்த தங்களது கருத்தினை வாய்மொழியாகவோ, எழுத்து பூர்வமாகவோ அளிக்கலாம் எனவும் திட்டம் குறித்த கருத்தினை கூற விரும்புகிறவர்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விவரமாக தெரிவித்து தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட திட்டம் குறித்து, வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு.

**திருமதி.நான்சி சமாதானம், காணார்பட்டி :-**

திருமதி. நான்சி சமாதானம், அவர்கள் பேசுகையில் 25 வருடங்களாக கல்குவாரிகள் இயங்கி வருவதாகவும், இந்த கல்குவாரிக்கு தென்பகுதியில் உள்ள விவசாய நிலத்தில் தான் விவசாயம் செய்வதாகவும், குவாரி உரிமையாளர்கள் தங்களின் தேவைகளை கேட்டு அதற்கு உதவி செய்துவருவதாகவும், இந்த கல்குவாரி அமைவதால் தங்களது விவசாயத்திற்கும் தங்களுக்கும் எந்தவித பாதிப்பு இல்லை எனவும், இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

**திருமதி. பிரிசிலா அருள்செல்வன், பார்வதியாபுரம் :-**

திருமதி. பிரிசிலா அருள்செல்வன், அவர்கள் பேசுகையில் 25 வருடங்களாக இந்த குவாரி இயங்கி வருவதாகவும், இதனால் எந்த வித பாதிப்பும் இல்லை எனவும், குவாரி உரிமையாளர் உதவி செய்வதாகவும், இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

**திரு. ஜான், காணார்பட்டி :-**

திரு. ஜான், அவர்கள் பேசுகையில் தான் சொந்தமாக டிப்பர் லாரிகள் வைத்து தொழில் செய்வதாகவும், தற்பொழுது கயத்தாரில் இருந்து கட்டுமான பொருட்கள் கொண்டு வருவதாகவும், இதனால் போக்குவரத்து செலவு அதிகமாக உள்ளதாகவும், தெரிவித்தார். இங்கு குவாரி செயல்பட்டால் இந்த ஊர் மக்களுக்கு குறைந்த விலையில் கட்டுமான பொருட்கள் கிடைக்கும் எனவும், இதனால் எந்த வித பாதிப்பும் இல்லை எனவும், எனவே இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

**திரு. விஜயராஜ், காணார்பட்டி :-**

திரு. விஜயராஜ், அவர்கள் பேசுகையில் தான் கட்டுமான ஒப்பந்த தொழில் செய்து வருவதாகவும், இந்த கல்குவாரியானது 25 வருடங்களாக செயல்படுவதாகவும், இதனால் தங்களுக்கு இடையூறு இல்லை எனவும், தற்போது கற்கள் தட்டுப்பாடு ஏற்படுவதால் கயத்தாரில் இருந்து கற்கள் கொண்டு வரப்படுவதாகவும், இந்த குவாரி செயல்பட்டால் கற்கள் உடனடியாக கிடைக்கும் எனவும், குவாரிக்கு அனுமதி அளித்து உதவும்படி கேட்டுக்கொண்டார்.

**திரு. பிரேம் குமார், முன்னாள் இராணுவ வீரர், காணார்பட்டி :-**

திரு. பிரேம் குமார், அவர்கள் பேசுகையில் கல்குவாரிகளால் இத்தனை வருடங்களாக தங்களது கிராமத்திற்கு நன்மை ஏற்பட்டுவருவதாகவும், இந்த கல்குவாரிக்கு அனுமதி அளிப்பதால் தங்கள் கிராம மக்களுக்கும் பஞ்சாயத்திற்கும் எந்த வித இழப்பும் இல்லை எனவும் கூறினார். பஞ்சாயத்திற்கு சுமார் 1.5 கோடி ரூபாய் கனிம நிதி கிடைத்ததாகவும், இந்த கனிம நிதியில் இருந்து " ஜல் ஜீவன் கூட்டு குடிநீர்" திட்டம் மூலமாக காணார்பட்டி மற்றும் அருகில் உள்ள குக்கிராமங்களுக்கு குடிநீர்

வசதி வழங்கப்பட்டதாகவும், காணார்பட்டி கிராம மக்கள் யாரேனும் இறந்தால் அவர்களுக்கு உரிய உதவி செய்வதாகவும், ஊர் மக்களுக்கு இலவசமாக கல் மற்றும் ஜல்லி வழங்குவதாகவும், எனவே கல்குவாரிக்கு உடனடியாக அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

**திரு. ஜெயகனி, இராமநாதபுரம் :-**

திரு.ஜெயகனி, அவர்கள் பேசுகையில் தான் ஒரு தொண்டு நிறுவனத்தில் தன்னார்வலராக பல ஆண்டுகளாக பணியாற்றி வருவதாகவும், இந்த கல்குவாரியானது பொது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதாகவும், கல்வி வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி, மருத்துவ வசதி, வேலைவாய்ப்பு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்குவதாகவும், எனவே குவாரியை வரவேற்று அனுமதி வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

**திரு. சாமுவேல் ஜெயராஜ், காணார்பட்டி :-**

திரு. சாமுவேல் ஜெயராஜ், அவர்கள் பேசுகையில் இந்த குவாரி அமைவது அனைவருக்கும் பயன் உள்ளதாக இருக்கும் எனவும், இங்கிருக்கும் ஆலயம் மற்றும் பள்ளிக்கு இக்குவாரியினால் எந்த பாதிப்பும் இல்லை எனவும், இந்த கல்குவாரி அமைவதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை எனவும் தெரிவித்தார்.

அதை தொடர்ந்து, வேறு யாரும் கருத்துகள் கூற வராததால், எழுத்து பூர்வமான மனுக்கள் இருந்தால் அளிக்கலாம் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் கூறியதை தொடர்ந்து 173 மனுக்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் அளிக்கப்பட்டது.

இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் அனைத்தும் முறையாக பதிவு செய்யப்பட்டு, அதன் குறிப்புகளும், வீடியோவும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு தக்க நடவடிக்கைக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்ததுடன் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

அத்துடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி

வருவாய் கோட்டாட்சியர்
திருநெல்வேலி.

**இணைப்புகள்:**

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் – 23 பக்கங்கள், 190 நபர்கள்).
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
4. கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் – 173 எண்ணங்கள்.